31167

**சுருக்கம்**

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் – சேலம் விற்பனைக்குழுவின் கீழ் இயங்கும் – நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்த கட்டடம் கட்ட நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.1.00– கோடியை உயர்த்தி ரூ.1.80/– கோடிக்கு திருத்திய நிதி ஒப்பளிப்பு செய்து– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மைத் (வேவி2(2)) துறை**

அரசாணை (நிலை) எண்.310

நாள்: 24.10.2016
திருவள்ளுவர் ஆண்டு 2047,
ஐப்பசி திங்கள் 8–ம் நாள்

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (2டி) எண்.201, வேளாண்மைத் (வேவி2) துறை, நாள் 25.11.2011.
2. அரசாணை (2டி) எண்.37, வேளாண்மைத் (வேவி2) துறை, நாள் 02.02.2012.
3. அரசாணை (நிலை) எண்.52, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 20.05.2014.
4. அரசாணை (நிலை) எண்.207, வேளாண்மைத் (வேவி2) துறை, நாள் 22.12.2014.
5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கடித எண்.விகுதி3/21174/2011, நாள் 12.11.2014, 19.05.2015, 26.11.2015, மற்றும் 13.01.2016.
6. அரசு கடித எண்.30286/வே.வி2(2)/2014–1, நாள் 26.12.2014, 10.09.2015, 13.11.2015, 17.12.2015, மற்றும் 28.07.2016.
7. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின்கடித எண்.விகுதி3/21174/2011, நாள் 16.09.2016.

-----

**ஆணை:–**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், சேலம் மாவட்டம் ஆத்தூர், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, ஈரோடு மாவட்டம் பவானி ஆகிய மூன்று ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு தலா ஒரு கோடி ரூபாய் செலவில் சொந்த கட்டடங்கள் கட்ட ஏதுவாக, சில நிபந்தனைகளுக்குட்பட்டு சம்பந்தப்பட்ட விற்பனைக்குழுக்களின் நிதியிலிருந்து மொத்தம் ரூ.3.00 கோடி செலவினம் மேற்கொள்ள வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையருக்கு நிர்வாக ஒப்புதல் (Administrative Approval) வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்குறிப்பிட்ட மூன்று ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு தலா ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்த கட்டடங்கள் கட்ட மொத்தம் ரூ.3.00 கோடி சம்பந்தப்பட்ட விற்பனைக்குழுக்களின் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

(த.பி.பா)

3. மேலே மூன்றாவது மற்றும் நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், உஞ்சனை கிராமம் புல எண்.112-ல், எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய ஆணையார் பெயரில் உள்ள 7.00 ஏக்கர் நிலத்தில் 2.00 ஏக்கர் நிலத்தினை அரசு வழிகாட்டி மதிப்பீட்டுத் தொகை ரூ.27.70 இலட்சம் எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு கேட்புத்துறை செலுத்திய பின்னர் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு நிலம் உரிமை மாற்றம் செய்ய அனுமதியளித்தும், சேலம் விற்பனைக்குழுவின் நிதியிலிருந்து மேற்சொன்ன தொகையை மேற்படி ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கி நில மாற்றத்தினை செய்து கொள்ள வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையருக்கு அனுமதியளித்தும் முறையே ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. மேலே ஐந்தாவது மற்றும் ஏழாவதாக படிக்கப்பட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கடிதங்களில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மூன்று ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு சொந்த கட்டடம் கட்ட நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டதில், சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் ஈரோடு மாவட்டம், பவானி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டு, புதிய கட்டடத்தில் அந்த ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருவதாகவும், ஆனால், திருச்செங்கோடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதைப் பொறுத்தவரை, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தாலும், சொந்தக் கட்டடம் கட்ட உகந்த இடம் கிடைக்கப்பெறாததால் 2011-2012-ஆம் ஆண்டிற்குள் இப்பணியை மேற்கொள்ள இயலவில்லை என்றும், மேலே பத்தி (3).ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திருச்செங்கோடு வட்டம், எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் உஞ்சனை கிராமத்தில் இடம் (2 ஏக்கர் நிலம்) தேர்வு செய்யப்பட்ட பின்னர், ரூ.1.80 கோடிக்கு 2014-2015-ஆம் ஆண்டின் Schedule of Rate-ன்படி திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே சேலம் விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.1.00 கோடிக்குப் பதிலாக, பின்வரும் விவரப்படி சேலம் விற்பனைக்குழு நிதியிலிருந்து மேற்கொள்ள ரூ.1.80 கோடிக்கு திருத்திய நிதி ஒப்பளிப்பு வழங்கிடுமாறும், இக்கட்டுமானப் பணிகளை தமிழ் நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ள அனுமதி வழங்கியும் திருத்திய அரசாணை வழங்கிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்:-

| வ. எண். | கட்டுமானப் பணிகளின் விவரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1) | அலுவலக கட்டடம், உலர்களம், கழிவறை, ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் வசதி ஆகிய பணிகள் செய்தல் | 45.00 |
| 2) | ஊரக கிட்டங்கி | 53.00 |
| 3) | பரிவர்த்தனைக் கூடம் | 52.00 |
| 4) | அலுவலக கட்டடம், ஊரக கிட்டங்கி மற்றும் பரிவர்த்தனைக் கூடம் முன்புறம், பிரதான நுழைவு கேட் மற்றும் கான்கிரீட் அணுகுசாலை அமைத்தல் | 6.00 |

(த.பி.பா)

| | | |
|---|---|---|
| 5) | அலுவலக தளவாடங்கள் மற்றும் எடைமேடை (எடையிடும் கருவி) | 5.00 |
| 6) | வெளிப்புற மின் கட்டமைப்பு மற்றும் மின்சார இணைப்பு போன்ற பணிகள் | 3.00 |
| 7) | விலை ஏற்றம் 2015–2016 – (Price Escalation charges 10% for the year 2015-2016) | 16.00 |
| | மொத்தம் | 180.00 |

இது தொடர்பாக சேலம் விற்பனைக்குழுவால் இயற்றப்பட்ட தீர்மான நகலை அனுப்பியுள்ளதுடன், இக்கருத்துருவில் குறிப்பிட்ட உட்கட்டமைப்பு பணிகளில் RIDF/ NABARD நிதியின் கீழ் கருத்துரு ஏதும் இல்லை எனவும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று சேலம் விற்பனைக்குழுவின் கீழ் செயல்பட்டுவரும் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கான செலவினத் தொகை ரூ.1,80,00,000/–க்கு (ரூபாய் ஒரு கோடியே எண்பது லட்சம் மட்டும்) திருத்திய நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை சேலம் விற்பனைக்குழு நிதியிலிருந்து மேற்கொள்ள 1991–ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) விதிகளில் உள்ள விதி எண்.96–ன்படி அனுமதி வழங்கியும், மேற்கண்ட பணியினை தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத்தின் பொறியியல் பிரிவு மூலம் மேற்கொள்ள அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.52297/வேளாண்மை/2016, நாள் 05.10.2016–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்.

பெறுநர்:-
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை–32.
தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை – 32.
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம்/நாமக்கல்
தனி அலுவலர்/செயலாளர், சேலம் விற்பனைக்குழு, சேலம்
(வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை – 32 மூலமாக)
இயக்குநர், உள்ளாட்சி, நிதித் தணிக்கைத்துறை, சென்னை 108
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் (பொது மற்றும் வருவாய் பிரிவு தணிக்கை) அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.

(த.பி.பா)

<u>நகல்</u>

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் தனிச் செயலாளர், வேளாண்மைத் துறை, சென்னை-9.

நிதித்துறை /ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-9.

வேளாண்மை (அநமு3) துறை தலைமைச் செயலகம், சென்னை-9. (அட்டவணைப்படுத்தும் வகைக்கு)

அரசாணை (2டி) எண்.201, வேளாண்மைத் துறை, நாள் 02.02.2012

அரசாணை (நிலை) எண்.07, வேளாண்மைத் துறை, நாள் 02.02.2012.

அரசாணை (2டி) எண்.207, வேளாண்மைத் துறை, நாள் 22.12.2014

இருப்பு கோப்பு/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

25/10/2016.

பிரிவு அலுவலர்

25.10.16